<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

**IA.No.22/2007 in OS.No.13/2005**

2026–ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 01–ஆம் நாள் புதன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியமாகிய **ம.சா.2 வது** நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.K. அனிதா, கிரேடு 1 பென்ஞ்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வாசுதேவன் | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

<u>முதல் விசாரணை</u>:

நான் பெரம்பலூரில் வழக்கறிஞராக தொழில் செய்துவருகிறேன். மு.வ.எண்.13/2005 வழக்கின் வாதியாக ஜவர்ஹாலால் அவருடைய அதிகார முகவர் வாதியாக இருந்து தாக்கல் செய்த வழக்கில் நான் வாதியின் வழக்கறிஞராக இருந்தேன். வழக்கின் வாதியான ஜவர்ஹாலால் மற்றும் பிரதிவாதியான அவருடைய சகோதரான அபுல்கலாம் ஆசாத் ஆகியோர்களை எனக்கு நன்கு தெரியும். அவர்கள் வீட்டில் நான் வாடகைக்கு குடியிருந்தவரையில் அவர்களை எனக்கு நன்கு தெரியும் மற்றும் குடும்ப நண்பர்களாவர். நான் அவர்கள் இருவரும் அண்ணன்,தம்பிகளாக இருப்பதால் சமாதானமாக செல்லும்படி அறிவுரை செய்தேன். அதற்கு அவர்கள் நீங்கள் இருந்து சமாதானம் செய்யுங்கள் என்று சொன்னார்கள். அதன்படி நான் வழக்கறிஞர் சிராஜுதின் மற்றும் வாதி, பிரதிவாதியுடன் ஒரு பொதுவான இடத்தில் உட்கார்ந்து பேசினோம். ஆனால் முடிவு செய்யமுடியவில்லை. அன்று இரவு சுமார் 10.00 மணியளவில் அபுல்கலாம்ஆசாத் என்னிடம் நேரடியாக வந்து நீங்கள் எப்படியாவது வழக்கை பேசிமுடியுங்கள் என்று சொன்னார். அந்த அடிப்படையில் வழக்கானது மக்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு அங்கு

வைத்து தரப்பினர்களுக்குள் சமாதானம் ஏற்பட்டு வழக்கு முடிக்கப்பட்டது. அந்த அடிப்படையில் முதல்நிலைதீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது. அந்த முதல்நிலைதீர்ப்பாணையில் ஸ்டேட்பாங்க்ஆப்இந்தியா கடன் சம்மந்தமாக சரத்துகள் இருந்தது. தாவா 2வது அயிட்ட சொத்தை விற்று வங்கி கடனை செலுத்துவது என்று பேசப்பட்டது. அந்த கடன் முழு தொகைக்கு சொத்து விற்பனை ஆகவில்லை. அதனால் சொத்தை விற்று மேற்கொண்டு இருவரும் பணம் போட்டு கடனை அடைத்தார்கள். அந்ததொகை யார் எவ்வளவு கொடுத்தார்கள் என்ற விவரம் குறித்து அவர்கள் சொல்ல சொல்ல ம.சா.ஆ.1 ஆவணத்தை நான் தயார் செய்து டைப்செய்துகொடுத்தேன். ம.சா.ஆ.1 ஆவணம் தயாரிப்பதற்கு வாதியும், பிரதிவாதியும் விவரம் சொன்னார்கள். டைப் செய்த பின்னர் அவர்கள் இருவரும் படித்து பார்த்து கையெழுத்து செய்தார்கள். நான் ம.சா.ஆ.1 ஆவணத்தில் தரப்பினர்கள் மற்றும் சாட்சிகள் கையெழுத்து செய்யும் வரை இருந்தேன். எழுதிகொடுத்த பின்னர் அசல் ஆவணங்களாக 2 ஆவணங்கள் எழுதப்பட்டிருந்ததில் ஆளுக்கு ஒரு அசல் ஆவணம் கொடுக்கப்பட்டது. நானும் தயாரித்தவர் என்ற விவரத்தில் அதில் கையெழுத்து போட்டேன். வாதியும், பிரதிவாதியும் கையெழுத்து செய்ததை நானும், சாட்சிகளும் பார்த்தோம். நானும், சாட்சிகளும் கையெழுத்து செய்ததை வாதி மற்றும் பிரதிவாதி பார்த்தார்கள். ஸ்டேட்பாங்க்ஆப்இந்தியா வங்கி கடனை இருவரும் சேர்ந்து செலுத்தியதாகவும், யார் யார் எவ்வளவு தொகை கொடுத்தவிவரமும் அதில் எழுதப்பட்டுள்ளது. கட்டியதொகை பொதுவான பணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ம.சா.ஆ.1 ஆவணம் அதில் குறிப்பிட்டுள்ள 24.08.2006ம் தேதி எழுதப்பட்டது.

<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

ம.சா.ஆ.1 ஆவணம் தயாரித்தபோது எந்தெந்த ஆவணங்கள் அடிப்படையில் தயார் செய்யப்பட்டது என்றால் 2வது இலக்க சொத்தை விற்ற கிரயப்பத்திரம், அதில் குறிப்பிட்டுள்ள தொகை, வங்கியில் அவர்கள் இருவரும் தனித்தனியாக கட்டிய பணத்திற்கான அவர்கள் காண்பித்த சலான்கள் மற்றும் வாடகை

பணத்தை வங்கியில் செலுத்திய விவரம் அவர்கள் சொல்லியது அடிப்படையில் தயார் செய்யப்பட்டது. வங்கியில் பணம் செலுத்திய விவரத்தை காட்டக்கூடிய சலான்களை தனித்தனியாக அவர்கள் இருவரும் கொண்டு வந்தார்களா என்றால் பிரதிவாதிதான் கொண்டு வந்தார். அப்போது அவர்கள் ஒற்றுமையாக இருந்தார்கள். வாதியோ அவர் மாமானாரோ வங்கியில் பணம் செலுத்திய விவரத்தை காட்டக்கூடிய சலானை என்னிடம் கொடுத்தார்களா என்றால் இல்லை. பிரதிவாதி தான் கொடுத்தார். இருவரும் ஆளுக்கு தலா ரூ.10லட்சம் வங்கியில் செலுத்திய விவரம் எனக்கு நேரடியாக தெரியும். ம.சா.ஆ.1 ஆவணம் எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் தாவா 2வது அயிட்ட கட்டிடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது. ம.சா.ஆ.1 ஆவணம் ஏற்பட்டபோது நான், வாதி, பிரதிவாதி, மற்றும் வாதியின் மாமானார் மற்றும் சாட்சிகள் இருந்தார்கள். ம.சா.ஆ.1 ஆவணம் ஏற்பட்ட நேரம் காலை சுமார் 11.00 மணியிலிருந்து 02.00 மணிவரை இருக்கும். ம.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சாட்சிகள் யார் என்று எனக்கு தெரியாது. அவர்களை வாதி, பிரதிவாதி தான்அழைத்து வந்தார்கள். ம.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சிகள் விவரத்தில் நான் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய கையெழுத்துவிவரத்தில் ஆவணம் தயாரித்தவர் மற்றும் சாட்சி என்று குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். அந்த அந்த இடத்தில் அவர்கள் கையெழுத்து செய்தார்கள். முதல்நிலைதீர்ப்பாணை பிறப்பிக்கபட்ட பின்னர் அதன்பின்னர் ஏற்படும் சமாதான விவரத்தை நீதிமன்றத்தில் தான் பதிவு செய்யவேண்டும் என்றால் சரியல்ல. மு.வ.எண்.3/2011 வழக்கின் சமாதான தீர்ப்பு செல்லாது என்று இந்த வழக்கு பிரதிவாதி வாதியாக இருந்து தாக்கல் செய்த வழக்கில் நான் இந்த வழக்கு வாதிக்கு ஆஜராகியுள்ளேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. அந்த வழக்கில் நான் தான் வாதிக்காக நிருபணவாக்குமூலம் தயார்செய்தேன் என்றால் ஞாபகமில்லை. மு.வ.எண்.109/2012 வழக்கில் இந்த வழக்கு வாதிக்காகவும் மற்றும் சொத்தை கிரயம் வாங்கியவருக்கும் நான் தான் ஆஜரானேன் என்றால்

வாதிக்காக ஆஜர் ஆனேன். சொத்தை கிரயம் வாங்கியவர்காக ஆஜர் ஆனனா என்றால் ஆவணங்களை பார்த்து தான் கூறமுடியும். வாதியின் அதிகார முகவருக்காக வழக்கறிஞர் என்ற முறையில் வழக்கு சொத்தை ஏலம் விடவேண்டும் என்று ஸ்டேட்பாங்க்ஆப்இந்தியாவிற்கு ஏலம் விடவேண்டும் என்று நான் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பு நகல் என்னிடம் காட்டப்படுவதாகும். அது **எ.ம.சா.ஆ.1**. ஆவணங்கள் நான் ஏற்படுத்தியது சம்மந்தமாக பதிவேடுகளில் பதிவுசெய்துள்ளேனா என்றால் அது தொடர்பில்லாத கேள்வியாகும். ஏற்கனவே வழக்கு சொத்தை ஏலம்விடவேண்டும் என்று நான் அறிவிப்பு அனுப்பிவிட்டு பின்பு அவர்களுக்குள் சமாதானம் ஏற்பட்டு ம.சா.ஆ.1 ஆவணம் தயார் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மு.வ.எண்.3/2011 வழக்கில் வங்கி பரிவர்த்தணை சம்மந்தமாக எந்த ஆவணமும் இல்லையென்று வாதியின் மாமனார் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் எனக்கு ஞாபகமில்லை.

**<u>மறுவிசாரணை</u>**:

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.